அரசுத் துறைகளின் கீழ் கட்டப்படுகின்ற, வீட்டு வசதி மூலம் கட்டப்படுகின்ற கட்டிடங்களுக்கெல்லாம் இங்கேயிருந்துதான் அந்தக் கற்கள் செல்லுகின்றன. அதோடு இந்தக் கல் அறுக்கும் தொழிலினால் அங்கே ஏப்ரல், மே, ஜூன் மாதங்களிலே வேலையில்லாமல் இருக்கின்ற அந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு, ஆயிரக்கணக்கான பேர்களுக்கு இந்த வேலைவாய்ப்பை அளிக்கின்ற தொழிலும்கூட. அதோடு நிலங்களைச் சமப்படுத்துகின்ற ஒரு நிலையும், நீர்ப்பாசனத்திற்கு வேண்டிய நிலையும் ஏற்படுகின்ற காரணத்தினால், அங்கே இந்த இரண்டு மூன்று மாதங்களுக்குச் செய்கின்ற இந்தத் தொழிலுக்கு அந்த செங்கல்லை அறுக்கின்ற அவர்களுக்கு வரி விலக்கை நமது இதய தெய்வம் புரட்சித் தலைவியின் ஆட்சியில் வணிகவரித் துறை அமைச்சராக இருக்கின்ற அமைச்சரவர்கள் இதற்கு வேண்டிய நடவடிக்கையெடுத்து அந்த வரியைக் குறைப்பார்களா ; வரியில்லாமல் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் ஏற்கனவே செங்கல்லுக்கும், ஓட்டிற்கும் வரி விதிப்பு முறை எந்தவகையில் விதிக்கப்பட்டிருக்கின்றது என்பதை மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கின்றேன். வரி ஏய்ப்பைத் தடுப்பதற்காக வேண்டித்தான், ஒட்டுமொத்தத்தில் எந்தச் செங்கல்லுக்கும் எந்த ஓட்டிற்கும் வரி விலக்கு இல்லை என்ற நிலையை எடுத்திருக்கிறோமே தவிர, குடும்பத் தொழிலாக அதே நேரத்தில் குடிசைத் தொழிலாகச் செங்கல் தயாரிப்பவர்கள் மீது வரி விதிப்பது இல்லை என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கின்றேன்.

முற்பகல் *10-40*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *231,* டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்.

231—

செங்கம் தொகுதியில் தொழிற்பேட்டைகள் அமைத்தல்

***36049—டாக்டர் பெ. வீரபாண்டியன்:**

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) செங்கம் தொகுதி, காஞ்சி மற்றும் செங்கம் ஒன்றியம், வேடங்குப்பத்தில் தொழிற்பேட்டைகள் (சிப்காட்) அமைக்க அரசு முன்வருமா ?

1995 ஏப்ரல் 5]

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் இத்திட்டம் நிறைவேற்றப்படுமா?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ; திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், செய்யாறு வட்டம் செய்யாறு–காஞ்சிபுரம் சாலையில் ரூ. 17.80 கோடி திட்ட மதிப்பீட்டில் முதற்கட்டமாக சுமார் 600 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு ‘சிப்காட்’ வளாகம் அமைக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. எனவே, இம்மாவட்டத்திலுள்ள செங்கம் தொகுதி காஞ்சி மற்றும் செங்கம் ஒன்றியம், வேடங்குப்பத்தில் ‘சிப்காட்’ தொழில் வளாகங்கள் அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் ஒன்றியத்தில், வேடங்குப்பம் பக்கத்தில், கிட்டத்தட்ட 1200 ஏக்கர் புறம்போக்கு நிலம் இருக்கிறது. அதுபோல, புதுப்பாளையம் ஒன்றியத்தில் காஞ்சிக்குப் பக்கத்தில் 1200 ஏக்கர் புறம்போக்கு நிலம் இருக்கிறது. பெரும்பாலும், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திலும், வடாற்காடு அம்பேத்கார் மாவட்டத்திலும், பருத்தி அதிக அளவில் விளைச்சல் ஆகிறது. அதிலும் குறிப்பாக, செங்கத்தில் அமைந்துள்ள மத்திய மாநிலப் பண்ணையில் 5 ஆயிரம் ஏக்கரில் பருத்திப் பயிரிடுகிறார்கள். எனவே, பருத்தியை மூலப் பொருளாகக் கொண்டு, ஜின்னிங் பருத்தி மில் அமைக்கக் கோருகிறேன். காரணம், செங்கத்தில் சீதோஷ்ண நிலை நன்றாக இருக்கிறது அதே நேரத்தில், செங்கம், மலைப் பகுதிகளால் சூழப்பட்டுள்ளது. மரங்கள் நன்றாக விளைகின்றன. எனவே, ஒரு மரச்சாமான் அலகு செங்கம் தொகுதியில் ஏற்படுத்தித் தரவேண்டும். மேலும் entrepreneurs --தொழில் முனைவோர்கள்--பக்கத்து மாவட்டத்திலே இருப்பவர்கள், பெருமளவில் அங்கே வந்து தொழில் துவங்க முயற்சிக்கிறார்கள். அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, அமைச்சர் அவர்கள் நான் குறிப்பிட்ட அந்த இரண்டு தொழிற்சாலைகளைத் துவக்க ஆவன செய்வார்களா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி, செங்கம் தொகுதியில், காஞ்சி மற்றும் செங்கம் ஒன்றியம், வேடங்குப்பத்தில் ‘சிப்காட்’–ஒரு தொழில் வளாகம்

அமைக்கும் சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா என்பதைப் பற்றிதான். இந்த 'சிப்காட்' வளாகம், திருவண்ணாமலை–சம்புவராயர் மாவட்டத்தில், செய்யாறு பகுதியிலே அமைப்பதற்குக் காரணமே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், கடந்த ஆண்டு, திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தின் நலத்திட்ட உதவிகளுக்காகச் சென்றிருந்தபோது, திருவண்ணாமலை–சம்புவராயர் மாவட்டம், வடாற்காடு–அம்பேத்கர் மாவட்டத்திலிருந்து பிரிந்த பிறகு தொழில் ரீதியாக அது மிகவும் பின்தங்கிய நிலையிலே இருப்பதை உணர்ந்து, அந்த மாவட்டத்திற்கு உடனடியாக ஒரு தொழிற்பேட்டை அமைக்க வேண்டுமென்று உத்தரவு போட்டார்கள். அதன் அடிப்படையில், 'டிட்கோ' நிறுவனத்தின் மூலம் ஒரு தொழில் வளாகத்தை அமைக்க வேண்டுமென்று, திருவண்ணாமலை–சம்புவராயர் மாவட்டத்தின் பல்வேறு இடங்களை, அந்த நிறுவனம் ஆய்வு செய்தது. அதற்குப் பிறகு, காஞ்சிபுரம்–செய்யாறு வட்டத்தில், காஞ்சிபுரத்திற்கு அருகில், 'சிப்காட்' வளாகம் அமைப்பதற்குண்டான சாத்தியக்கூறுகள் இருப்பதாகக் கண்டறிந்து, முதற்கட்டமாக அங்கே 'சிப்காட்' தொழில் வளாகம் அமைப்பதற்கு உத்தரவு போடப்பட்டு, பணிகள் நடந்து வருகின்றன. அதுமட்டுமல்ல; இந்த திருவண்ணாமலை–சம்புவராயர் மாவட்டமானது, 'ஸீரோ இண்டஸ்ட்ரி', அதாவது தொழிலில் மிகவும் பின்தங்கிய மாவட்டமாக இருக்கிற காரணத்தினால், மாண்புமிகு முதலமைச்சருடைய முயற்சியின் காரணமாக, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், அதாவது 'டிட்கோ' நிறுவனத்தின் மூலம், மூவாயிரம் கோடி ரூபாயில், மூவாயிரம் பேருக்கு நேர்முகமாகவும், 50 ஆயிரம் பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய இரும்புத் தாது கொண்ட ஒரு தொழிற்சாலையை, ஒரு மிகப் பெரிய தொழிலை அங்கே நிறுவ இருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினருடைய ஆதங்கம் எங்களுக்குப் புரிகிறது. எனவே, பெரிய தொழில் வருகிற நேரத்தில், சிறு தொழிலுக்காக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏங்க வேண்டாமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் தொகுதி, மிகவும் பிற்பட்ட ஒரு தொகுதி என்ற காரணத்தினால்தான், தொழிற்சாலை என்பது அங்கே சுத்தமாகக் கிடையாது என்ற காரணத்தினால்தான், தங்கள் துறையிடம் இந்தக் கேள்வியை நான் கேட்டேன். இனி வருங்காலங்களில், அது வருவதாகத் தாங்கள் வாக்குறுதி அளித்திருக்கிறீர்கள். இருப்பினும், நான் சொன்ன இரண்டு இடங்களில், அதாவது பருத்தியை மூலப் பொருளாகக்

கொண்டு ஜின்னிங் பேக்டரியையும், மரத்தை மூலப் பொருளாகக் கொண்டு ஒரு ஃபர்னீச்சர் யூனிட்டையும் ஏற்படுத்தித் தருவீர்களா என்று கேட்க விழைகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் வட்டம் என்பது தொழில் ரீதியாக மிகவும் பின்தங்கிய வட்டம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியில், யார் எந்தத் தொழிலை ஆரம்பித்தாலும், அந்தத் தொழில் நிறுவனத்திற்கு மூலதன மானியமாக 20 விழுக்காடு, அரசு மானியமாகத் தருகிறது. அதுமட்டுமல்ல; 5 ஆண்டுகளுக்கு விற்பனை வரியைத் தள்ளுபடி செய்தும், 9 ஆண்டுகளுக்கு விற்பனை வரியை ஒத்திப் போடுகிற சலுகையும் அளிக்கப்படுகிறது. அதுமட்டுமல்ல; மின்சார சலுகையும் முதல் ஆண்டுக்கு 60 சதவிகிதம் கட்டினால் போதும்; இரண்டாம் ஆண்டில் 70 சதவிகிதம் கட்டினால் போதும்; மூன்றாம் ஆண்டில் 80 சதவிகிதம் கட்டினால் போதும் என்கிற இந்த சலுகைகளெல்லாம் அரசு கொடுத்திருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியிலே தொழில் துவங்குவதற்கு யார் முன்வந்தாலும் இப்படிப்பட்டச் சலுகைகள் இருக்கின்ற காரணத்தினாலே அங்கே வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய தொகுதியிலே இருக்கின்ற, தொகுதிக்காக வழங்கப்பட்டிருக்கின்ற இந்தச் சலுகைகளைப் பயன்படுத்தி தொழில் முனைவர்களை அழைத்து இப்படிப்பட்ட தொழில்களை துவங்குவதற்கு முயற்சியை அவர் எடுத்துக்கொண்டால் அரசு முன்வந்து எல்லா உதவிகளையும் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 232, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர்.

232—

கைத்தறித்துறையில் தாழ்த்தப்பட்டோருக்கு பணியிட ஒதுக்கீடு

*19096—**திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறி நிறுவனங்களிலும், விற்பனை நிலையங்களிலும் தாழ்த்தப்பட்டோருக்கான பணியிட ஒதுக்கீடு பின்பற்றப்படுகிறதா?